சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி:30.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | பிரபா |
| தந்தை பெயர் | : | ரெங்கசாமி |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | உதவி மருத்துவர் |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.05.2020 ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது மலையூர் கிராமம், வடக்கு தெருவை சேர்ந்த சங்கர் மகன் சூரியா என்பவரை அவரது சகோதரர் சதீஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அப்போது அவரை விசாரித்த போது அன்றைய தினம் மாலை 4.00 மணிளவில் மலையூர் என்ற ஊரில் தெரிந்த 2 நபர்கள் தன்னை கட்டி போட்டு மரக்கட்டையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்யும் போது அவர் சுய நினைவுடன் காணப்பட்டார். அவர் மது அருந்திய வாடை இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் 1) தலையில் இடது நடு பகுதியில் தொடு வலி இருந்தது. 2) இடது காது அருகில் 0.1 செ.மீ அளவில் சிராய்பு காயம் இருந்தது. இவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து மற்றும் முதல் உதவி சிகிச்சை அளித்து மேலும் மேல் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M Digitally signed by VADIVEL M Date: 2025.12.30 18:38:32 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.